# அசத்தியம் அழிகிறது

இஸ்லாத்தை அழித்தொழிக்க எண்ணிய எதிரிகள், குறிப்பாக யூதர்கள், பல போர்களைத் தொடுத்தனர். சதி செய்து பல ஹாஃபிழ்களைக் கொன்றனர். தொழுது கொண்டிருந்த உமர்(ரழி) அவர்கள் யூதன் ஒருவனால் கொல்லப்பட்டார்கள். அவர்களது ஆட்சியில் இஸ்லாம் உலகெங்கும் மூலை முடுக்குகளிலெல்லாம் பரவியது. இஸ்லாத்தை அழிக்க முடியாததை உணர்ந்த எதிரிகள் இஸ்லாத்தின் கொள்கையில் முரண்பாடுகளை ஏற்ப டுத்த முனைந்தனர். எனவே அன்றிலிருந்து இன்று வரை குர்ஆனில் இடைச்செருகல்கள் செய்து வருகின்றனர். என்ன ஆச்சரியம்? **<u>“நாமே இந்தக் குர்ஆனின் பாதுகாவலனாக இருக்கின்றோம்”</u>** (அல்குர்ஆன் 15:9) என்று அல்லாஹ் உத்திரவாதமளித்துள்ளதால், இடைச்செருகல்கள் அவ்வப்போது உலகளவில் கண்டு பிடிக்கப்பட்டு தடுத்து நிறுத்தப்பட்டும் வருகின்றன. குர்ஆனுக்கு அடுத்த படியாக முஸ்லிம்கள் பின்பற்றிக் கொண்டிருப்பது ஹதீஸ்களை மட்டும் தானே. எதிரிகளின் சதித்திட்டம் நிச்சயமாக உள்ளடங்கி இருக்கும் என்று கூறும் அளவிற்கு முஸ்லிம்களே இஸ்லாத்தின் கொள்கைகளில் முரண்பாடுகளை ஏற்படுத்தினர்.

நபி(ஸல்) அவர்களால் சுவர்க்கவாசி என நற்செய்தி கூறப்பட்ட உஸ்மான்(ரழி) அவர்கள் கொலை செ ய்யப்பட்டார்கள். அப்துர்ரஹ்மான் பின் அத்தீஸ் என்ற முஸ்லிம் ஒருவன் இக்கொலையில் முக்கிய பங்கு வகித்தான், **<u>‘உஸ்மான்(ரழி) அவர்கள் வழிகேட்டில் சென்று விட்டார்’</u>** என நபி(ஸல்) அவர்கள் சொல்லாத ஒன்றை, சொன்னதாகக்கூறி பொய்யான ஹதீஸை இட்டுக்கட்டிய முதல் முஸ்லிம் இவன்தான். அரசியலில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளால் பகைமை கொண்டு இவ்வாறு ஹதீஸைப் புனைந்தான். *ஆதாரம் : தாரீகுத்தபாரி, பாகம் 1*

**<u>குர்ஆனைக் கற்றதாகக் கூறியவர்கள்</u>** குர்ஆன் வசனங்களுக்கு நபி(ஸல்) அவர்கள் கூறிய விளக்கத்தை விட்டு, சுய விளக்கம் கூறினர். **<u>குர்ஆனுக்கு சுய விளக்கம் கூறி முஸ்லிம்கள் பிரிந்தனர்.</u>** பாவங்களை மன்னித்து கிருபை செய்பவன் அல்லாஹ் என்ற அவனது தன்மையை மறுத்து **“பெரும்பாவம் செய்பவன் காஃபிர்”** எனக்கூறி காரீஜிய்யா என்ற பிரிவை ஏற்படுத்தினார்கள். குர்ஆன் மட்டும் போதும் என்றனர். ஹதீஸ்கள் தேவையில்லை என்றனர். **<u>“உம்மத்து ஒரே உம்மத்துதான்”</u>** என்ற (23:52) குர்ஆன் வசனத்தைப் புறக்கணித்து, குர்ஆனைக் கற்றவர்கள் ஜஹமிய்யா, ஜபரிய்யா, கத்ரிய்யா (முஃதஸிலா), ஹரூரிய்யா, ஷிஆ, சுன்னீ (சுன்னத் ஜமாஅத்), சுன்னத் ஜமாஅத்தில் ஹனஃபீ, ஷாஃபீ, மாலிகீ, ஹன்பலீ என 4 மத்ஹபுகள், தரீக்காக்கள் அவைகளின் எண்ணற்ற பிரிவுகள் என பல பிரிவுகளை ஏற்படுத்தினர்.

ஒவ்வொரு பிரிவினரும் குர்ஆன் வசனங்களுக்கு சுய விளக்கம் கூறியதுமில்லாமல், **<u>பொய்யான ஹதீஸ்களை முஸ்லிம்கள் இட்டுக்கட்டினர்.</u>** தம் பிரிவின் தலைவர்களை நபி(ஸல்) அவர்கள் புகழ்ந்து கூறியதாகவும், பிற பிரிவின் தலைவர்களை இகழ்ந்து கூறியதாகவும் பொய்யான ஹதீஸ்களை இட்டுக்கட்டினர். ஹிஜாஷ் தேசத்தினரும், ஈராக் நாட்டினரும், ஷிஆக்களும், சுன்னத் ஜமாஅத்தின் மத்ஹபுகளும் லட்சக்கணக்கான பொய்யான ஹதீஸ்களைப் புனைந்தனர். உமயாக்கள், தங்கள் ஆட்சியை நபி(ஸல்) அவர்கள் புகழ்ந்ததாகவும் ஹதீஸ்களைப் புனைந்தனர். முஆவியா(ரழி) அவர்களின் ஆதரவாளர்களும் ஹதீஸ்களை இட்டுக்கட்டினர். ஈராக்கில் பஸ்ராவின் அமீராக இருந்த அலீ(ரழி) அவர்களின் பேரன் முஹம்மது(ரஹ்) அவர்கள், ஹலாலை ஹராமாகவும், ஹராமை ஹலாலாகவும் 4000 ஹதீஸ்களை இட்டுக்கட்டிய ‘அபுல் அவ்ஜாயீ’ என்பவரின்

தலையை வெட்டுமாறு உத்தரவிட்டார்கள். (ஆதரம் : தன்ஸீஹ்) இமாம் அபூ ஹனீபா(ரஹ்) அவர்கள் ஷிஆக்களின் ஹதீஸ்களை நிராகரித்தார்கள். இமாம் ஷாஃபீ(ரஹ்), இமாம் மாலிகீ(ரஹ்) அவர்கள் ஈராக் நாட்டினரின் ஹதீஸ்களை ஏற்காதீர்கள் என வேண்டுகோள் விடுத்தனர். (ஆதாரம் : உலூமுல் ஹதீஸ்; இப்னு கதீர், அல்முன்தகா), 'ஷிஆக்கள் புனைந்த ஹதீஸ்கள் 3 லட்சத்தை எட்டும்' என கலீலி(ரஹ்) அவர்கள் கூறினார்கள். *(ஆதாரம் : அல் இர்ஷாது)*

***'எனது உம்மத்தில் ஒரு மனிதர் வருவார். அவர் பெயர் நுமான் பின் தாபித். அபூ ஹனீஃபா என்ற புனைப்பெயரால் அவர் அழைக்கப்படுவார். அவர் தனது கையால் அல்லாஹ்வுடைய மார்க்கத்தையும், எனது சுன்னத்தையும் உயிர்ப்பிப்பார்' என்று பொய்யான ஹதீஸ்களை ஹனஃபிகள் இட்டுக்கட்டி, குர்ஆன் ஹதீஸில் இல்லாத மத்ஹபுகள், குர்ஆன், ஹதீஸைப் பின்பற்றுவதாகக் காட்டிக் கொண்டனர். (ஆதாரம் : தாரிகு பக்தாது). 'என்னுடைய உம்மத்தில் ஒரு மனிதர் வருவார். அவருடைய பெயர் முஹம்மது பின் இத்ரீஸ் (இமாம் ஷாஃபிஈ(ரஹ்) அவர்களின் இயற் பெயர்). இவர் என்னுடைய உம்மத்தை வழிகெடுப்பதில் இப்லீஸை விட மிகவும் மோசமானவர்'*** என்று நபி(ஸல்) அவர்கள் சொன்னதாக ஹதீஸ்களை ஹனஃபிகள் இட்டுக்கட்டி ஷாஃபிகளைத் தாக்கினர். (ஆதாரம் : தன்ஸீஹுஷ் ஷரீஅத்) இவ்வாறாக பொய்யான ஹதீஸ்கள் மக்களிடம் வேகமாக பரப்பப்பட்டன.

***'இந்த நபி தமதுஇச்சைப்படி (சுயமாக எதையும்) பேசுவதில்லை'*** (53:3), ***'இந்த நபி விசுவாசிகளுக்கு வேதத்தையும், ஹிக்மத்தையும் (ஞானம் - ஹதீஸ்) கற்றுக் கொடுக்கின்றார்*** (3:164) என்று அல்லாஹ் கூறியிருப்பதற்கேற்ப, குர்ஆனைப் பாதுகாத்தது போல, அல்லாஹ் தனது கிருபையால் எண்ணற்ற ஹதீஸ் கலா வல்லுனர்களை வாழச்செய்து ஹதீஸ்களை தரம் பிரித்து தரும்படியான ஏற்பாடுகளைச் செய்து தந்தான். நினைத்துப் பார்க்க முடியாத சிரமங்களுடன், அயராமல் பாடுபட்டு அவர்கள் வெற்றி கண்டனர். இமாம் புகாரீ(ரஹ்) அவர்கள் சேகரித்த 6 லட்சம் ஹதீஸ்களில் 7275 ஹதீஸ்களை மட்டுமே ஆதாரப் பூர்வமானவைகளாகப் பதிவு செய்தார்கள். மீதி 5,92,795 பொய்யான ஹதீஸ்களை நிராகரித்தார்கள். இவ்வாறாக ஒவ்வொரு ஹதீஸ் கலா வல்லுனர்களும் பாடுபட்டு வென்றனர். **1000 ஆண்டுகளுக்கும் முன்பாகவே இப்பணி பரிபூரணமாக்கப்பட்டது.** அல்லாஹு(ஜல்) இந்த உம்மத்திற்கு குர்ஆனையும், ஹதீஸையும் பாதுகாத்துத் தந்தான்.

ஆனால், பரிதாபத்திற்குரிய நிலை! ***குர்ஆனைக்கற்றதாகக்கூறிய பிரிவுகளின் எல்லா தலைவர்களுமே,*** தங்களுக்கு கிடைத்து வந்த புகழ் மற்றும் உலக ஆதாயங்களின் காரணமாகப் பிரிவுகளை விட்டு வெளிவரவில்லை. பிரிவுகள் குர்ஆன், ஹதீஸைப் போதிக்கின்றன என பச்சைப்பொய்க்கூறி மக்களில் பெரும்பான்மையினரை பிரிவுகளிலேயே தக்க வைத்துக் கொண்டார்கள்.

***'எவர்கள் தங்கள் மார்க்கத்தில் பிரிவினைகளை உண்டாக்கிப் பல பிரிவுகளாகப் பிரிந்து விட்டனரோ, ஒவ்வொரு கூட்டத்தாரும் தங்களிடம் இருப்பதைக்கொண்டே மகிழ்வடைகிறார்கள்'*** (30:32) என்ற குர்ஆன் வசனம் இவர்களுக்குப் படிப்பினைத் தரவில்லை.

பிரிவுகளின் தலைவர்கள் ஹதீஸ்களை இட்டுக்கட்டியதோடு நின்று விடவில்லை. குர்ஆனுக்கு நபி(ஸல்) அவர்கள் கூறிய விளக்கத்தை விட்டு, சுய விளக்கங்கள் கூறி ***'குர்ஆன் தப்ஸீர்'*** என்ற பெயரிலும், ***'தப்ஸீர் விரிவுரை'*** என்ற பெயரிலும் நூல்கள் வெளியிட்டு அவரவர்கள் தங்களது பிரிவுக்கொள்கைகளை அவற்றில்

புகுத்தினர். அதில் குர்ஆன் வசனங்களை எழுதி, அந்த வசனத்திற்கு எதிரான கருத்துக்களை தங்களது சுய விளக்கங்களாலோ / பொய்யான ஹதீஸ்களாலோ நிலை நாட்டினர். எவரும் சந்தேகிக்காத வண்ணம், தேவைப்படும் சில வசனங்களுக்கு மட்டுமே இவ்வாறு செய்து இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கையில் முரண்பாட்டை ஏற்படுத்தினர். இன்றளவும் அரபிக்கல்லூரிகள் போற்றிப் புகழும் **'ஜலாலைன்'** என்ற தப்ஸீருக்கு விரிவுரையான **'தப்ஸீர் சாவியில்'** குர்ஆனின் 18:24வது வசனத்திற்கு எழுதப்பட்ட ஒரே ஒரு சுய விளக்கத்தை மட்டும் உதாரணத்திற்குத் தருகிறோம்.

**குர்ஆனின் 18:24வது வசனம் :** ''இன்ஷா அல்லாஹ் (சொல்ல) (நபியே) நீர் மறந்து விட்டால், உம் இறைவனை நினைவுபடுத்திக் கொள்வீராக; **இன்னும் என்னுடைய இறைவன் நேர்வழியில் இதை விட இன்னும் நெருங்கியதை எனக்கு அறிவிக்கக்கூடும்"** என்றும் கூறுவீராக!.

(கோடிட்டுக் காண்பித்துள்ள இறை வசனத்தில் இஸ்லாம் அல்லாத கொள்கையை நிலைநாட்டி குர்ஆனை மட்டம் தட்டுவதைப் பாருங்கள்) **"நான்கு மதஹபுகள் தவிர எதனையும் பின்பற்றக்கூடாது. அது சஹாபாக்கள் சொல்லுக்கு ஒத்திருந்தாலும் சரியே; குர்ஆன் வசனத்திற்கு ஒத்திருந்தாலும் சரியே; அவைகளைப் பின்பற்றாமல், மத்ஹபுகளையேப் பின்பற்றவேண்டும்; மற்றதைப் பின்பற்றுபவன் மத்ஹபுகளுக்கு அப்பாற்பட்டவன்; வழி கெட்டவனும் வழிகெடுப்பவனும் ஆவான்" (மத்ஹபுகள் நேர்வழியி ல் இருக்கின்றனவாம்! குர்ஆன், ஹதீஸும் வழிகேடாம்)**

**"நிச்சயமாக இந்தக் குர்ஆன் என்னுடைய நேர்வழியாகும், ஆகவே இதனையேப் பின்பற்றுங்கள். இதர வழிகளை நீங்கள் பின்பற்ற வேண்டாம். அவை உங்களை அல்லாஹ்வுடைய வழியை விட்டும் பிரித்து விடும்"** (6:153) என்ற குர்ஆனின் வசனத்தை, தப்ஸீர் விளக்கவுரை கேலி செய்கிறதல்லவா?

முஹம்மது(ஸல்) என்ற நம் அடியாருக்கு நாம் அருளிய வேதத்தில் **நீங்கள் சந்தேகம் உடையவர்களாயி ருப்பீர்களேயானால், அல்லாஹ்வைத்தவிர உங்கள் உதவியாளர்களை அழைத்துக் கொண்டு, இது போன்ற ஒரு அத்தியாயத்தையாவது கொண்டு வாருங்கள்** (2:23) என அல்லாஹ் **'குர்ஆன்தான் சிறந்தது'** என்று சவால் விட்டுக் கொண்டிருக்கிறான். குர்ஆன், ஹதீஸைப் புறக்கணிக்கும் ஃபிக்ஹு சட்டங்களை மத்ஹபினர் உருவாக்கினர். ஆனால், நமது சஹாக்களின் (ஃபிக்ஹ்) நூல்களை ஆசிரியரிடமிருந்து படித்துக்கேட்காமல், நேரடியாகப் பார்ப்பது இரவில் நின்று வணங்குவதை விடச்சிறந்ததாகும். இந்த ஃபிக்ஹு நூல்களைக் கற்றுக்கொள்வது குர்ஆன் வசனங்களைக் கற்பதை விடச்சிறந்ததாகும்'' என்று ஃபிக்ஹு சட்ட நூல் ''துர்ருல் முக்தார், பாகம் 1ல் கூறப்பட்டுள்ளது. **மத்ஹபுகளின் குப்பை நூல்களை "ஃபிக்ஹு கலைக் கள ஞ்சியம்" என்று புகழாரம் சூட்டி மகிழ்கின்றனர் மவ்லவிகள்.**

**"முஸ்லிம்களிடம் மார்க்க அறிவு இல்லாத பலவீனம்தான் மவ்லவிகளின் பலம்".** எனவே முஸ்லிம்கள் மார்க்கத்தை அறிந்து கொள்ள விடமாட்டார்கள் இந்த மவ்லவிகள். அதற்காக என்னென்ன தடைகள் ஏற்ப டுத்த வேண்டுமோ அத்தனையையும் செய்கிறார்கள். அத்தடைகளுள் மிக முக்கியமான ஒன்றுதான் **"சிறு தொடக்குள்ளவர்கள், பெருந்தொடக்குள்ளவர்கள், குளிப்பு கடமையானவர்கள், மாதவிடாய் பெண்கள் குர்ஆனை தொடக்கூடாது ஓதக்கூடாது"** என்பது. திருச்சி மாநகர ஜமாஅத்துல் உலமா சபையினரின் இந்தக் கருத்தை **'அசத்தியம் அழிவது சத்தியம்'** என்ற தலைப்பில் பிரசுரம் வெளியிட்டு பொய்யான ஹதீஸ்களை ஆதாரம் காட்டி நிரூபிக்கும் கீழ்த்தரமான செயலை செய்துள்ளனர். பொய்யான ஹதீஸ்களை ஆதாரம் காட்டி

பொய்யான ஹதீஸில் செயல்படலாம் எனக்கூறுபவர்கள்: உஸ்மான்(ரழி) அவர்களைக்கொலை செய்த அப்துர்ரஹ்மான் பின் அத்தீஸின் வழித்தோன்றல்கள்; உஸ்மான்(ரழி) அவர்கள் வழிகேட்டில் இருந்ததாகக் கூறியதை ஒப்புக் கொண்டவர்கள் என்றாகிவிடும்.

இந்த சபையினர் இப்படிக்கூறுவதற்கு ஆதாரமாக 3 பொய்யான ஹதீஸ்களை எடுத்து வைப்பதோடு, சஹாபாக்களையும் இமாம்களையும் தம் பக்கம் சேர்த்துக் கொள்கின்றனர். இது மக்களுக்குக் காட்டும் அவர்களின் பொய் முகம்! குர்ஆனும், ஹதீஸும் இப்படிக் கூறாத போது, மத்ஹபுகளின் ஃபிக்ஹு நூல்கள் கிறுக்குத்தனமான சட்டங்களை இயற்றி இருப்பதே மவ்லவிகள் இப்படிக் கூறுவதற்கான காரணம் ஆகும்.

**“குர்ஆனைப் படிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் ஒளுவின்றித் தொடுவது ஹராம். ஆனால் பரக்கத்துக்காகத் தொடுவதானால் ஒளு தேவையில்லை. குர்ஆன் என்று நினைத்தால் தொடுவதற்கு ஒளு வேண்டும். குர்ஆன் இல்லை என நினைத்தால் தொடுவதற்கு ஒளு வேண்டாம். குர்ஆனைப் பிற புத்தகங்களுடன் சேர்த்துத் தூக்கினால் ஒளு தேவையில்லை. படிப்பதற்கு மிகச்சிரமமாக இருக்கிற வகையில், மிகச்சிறியதாக எழுதப்பட்ட குர்ஆனை ஒளுவின்றித் தொடலாம்.**

*(அத்தனை உளறல்களும் இடம் பெற்ற மத்ஹபு ஃபிக்ஹு நூல் : இஆனா, பாகம் 1)*

குர்ஆனை விளங்கிப் படிப்பவர்கள், **“குர்ஆன், ஹதீஸ் கொள்கையில் மவ்லவிகள் இல்லை என்பதையும், மக்களுக்கும் குர்ஆன், ஹதீஸின் நேர்வழியை போதிப்பது இல்லை என்பதையும்”** தெரிந்து கொள்வார்கள் என்ற பயத்தினால்தான், படிப்பவர்கள் ஒளூ இல்லாமல் குர்ஆனைத் தொடக்கூடாது ஓதக்கூடாது என்றெல்லாம் பயமுறுத்தி வைத்திருக்கின்றனர். அவர்களது கூற்றை வலுப்படுத்துவதற்காக, கீழ்த்தரமான நிலைக்குச்சென்று **3 பொய்யான** ஹதீஸ்களை ஆதாரம் காட்டி மக்களை ஏமாற்றுகிறார்கள். அந்த **ஹதீஸ்களின் பரிதாப நிலையைப் பாருங்கள்.**

**சபையின் ஆதாரம் 1 : “நபி(ஸல்) அவர்கள் குளிப்பு கடமையான நேரங்களைத்தவிர மற்ற எல்லா நேரங்களிலும் குர்ஆன் ஓதக்கூடிய வழக்கம் உடையவர்களாக இருந்தார்கள்”** என அலீ(ரழி) அவர்கள் நபியின் அமலைக்கூறுகிறார்கள். *(ஆதாரம் : நஸயீ, பாகம் 1, பக்கம் 52) (இந்த பொய்யான ஹதீஸை இப்னு உமர்(ரழி)* அவர்களும் அறிவிக்கிறார்கள்).

**ஹதீஸின் தரம் :** இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் வரிசையில் இடம் பெற்றுள்ள **“அப்துல்லாஹ் பின் ஸலமா”** என்பவர் முதுமை வயதில் நினைவாற்றல் தடுமாறியவராகி விட்டார் என்றும், அவர் இந்த ஹதீஸை முதுமை வயதில்தான் அறிவித்துள்ளார் என்று ஷுஃபா(ரஹ்) அவர்கள் குறிப்பிடுகிறார்கள். இமாம் ஷாஃபிஈ(ரஹ்) அவர்கள் இந்த ஹதீஸை ஏற்க மறுத்துள்ளதாக, இமாம் பைஹகீ(ரஹ்) அவர்களும் அறிவிக்கிறார்கள். எனவே நபி(ஸல்) அவர்கள் அவ்வாறு கூறவில்லை என்பது தெளிவாகி விட்டது.

**சபையின் ஆதாரம் 2 : “குளிப்பு கடமையானவர்களும், மேலும் மாத விடாய் வரக்கூடிய பெண்களும் குர்ஆனிலிருந்து கொஞ்சத்தையும் (அதாவது) ஒரு ஆயத்தையும் ஓதவேண்டாம்”** என நபி(ஸல்) அவர்கள் கூறிகிறார்கள்.*ஆதாரம் : திர்மிதி பாகம் 1, பக்கம் 34*

**ஹதீஸின் தரம் :** இந்த ஹதீஸ் **‘இஸ்மாயீல் பின் அய்யாஷ்’** என்பவர் வழியாக மட்டுமே

அறிவிக்கப்பட்டிருப்பதாகவும், இந்த நபர் மறுக்கத்தக்க பல ஹதீஸ்களை கூறியிருக்கிறார் என்றும் அதுவும் அவைகளை ஈராக் நாட்டினர், ஹிஜாஷ்வாசிகள் வழியாக அறிவித்துள்ளதாகவும் கூறி, இமாம் புகாரீ(ரஹ்) அவர்கள் இதை பலவீனமான ஹதீஸ் என்று அறிவித்துள்ளார்கள். இந்த நபரைப்பற்றி இமாம் அஹமது பின் ஹன்பல்(ரஹ்) அவர்கள் அதிருப்தியான கருத்தைத் தெரிவிக்கின்றார்கள். எனவே இது ஏற்கத்தக்க ஹதீஸ் அல்ல. ஆகவே நபி(ஸல்) அவர்கள் அவ்வாறு கூறவில்லை என்பது தெளிவாகி விட்டது.

**சபையின் ஆதாரம் 3 :** ‘அம்ருப்னு ஜஹ்ம்(ரழி) அவர்களுக்கு, நபி(ஸல்) அவர்கள் எழுதிய கடிதத்தில், ‘சிறு தொடக்கு இன்னும் பெருந்தொடக்கை விட்டும்) தூய்மையானவர்களைத்தவிர மற்றவர்கள் குர்ஆனைத் தொடக்கூடாது என்று எழுதி இருந்தார்கள். *ஆதாரம் : முஅத்தா, பாகம் 1, பக்கம் 163*

**ஹதீஸின் தரம் :** இந்த ஹதீஸை **‘அப்துல்லாஹ் இப்னு அபூபக்கர் இப்னு ஹஸ்ம்’** அறிவிக்கிறார். இந்த ஹதீஸ் இரண்டு காரணங்களுக்காக ஏற்றுக்கொள்ள மறுக்கப்பட்டுள்ளது. 1. இதன் அறிவிப்பாளர் தொடர் அறுபட்டு உள்ளது. (அதாவது அறிவிப்பாளர்களுக்கிடையே சந்திப்பு நிகழவில்லை. சந்திப்பு நிகழாமலேயே ஒருவர் மற்றவருக்கு எப்படி அறிவித்திருக்க முடியும்? 2. இதன் அறிவிப்பாளர் வரிசையில் **‘சுவைத் இப்னு ஹாதம்’** என்ற நம்பகமற்ற ஒருவர் இடம் பெறுகிறார். எனவே இந்த ஹதீஸ் ஏற்கப்படவில்லை. ஆக, நபி (ஸல்) அவர்கள் அவ்வாறு கூறவில்லை என்பது தெளிவாகிவிட்டது.

குர்ஆனை தொடக்கூடாது ஓதக்கூடாது என்ற இந்த 3 ஹதீஸ்களும் இதே கருத்தில் இன்னும் இருக்கக்கூடிய சில ஹதீஸ்களும் தரமற்றதாகவே இருக்கிறது. எனவே, நபி(ஸல்) அவர்கள் இக்கருத்தைக் கூறவில்லை என்பது தெளிவாகிவிட்டது.

நபிதோழர்களில் அதிகமானவர்களும், தாபியீன்களும், பல இமாம்களும் **‘தொடக்கூடாது, ஓதக்கூடாது’** எனக்கூறியிருப்பதாக, பொதுவாக எழுதியிருக்கிறார்கள். நபி(ஸல்) அவர்களின் சொல், செயல், அங்கீகாரம் இவைகள் மட்டுமே ஹதீஸ்கள். ஹதீஸ்களில் நபி(ஸல்) அவர்கள் சம்பந்தப்பட்டிருப்பார்கள். மேற்கண்ட ஹதீஸ்களை நபி(ஸல்) அவர்கள் கூறவே இல்லை எனபதால், அத்தனையும் பொய்யான ஹதீஸ்கள் என்றறிந்தோம். ஹதீஸ் நூல்களில் இடம் பெற்றுள்ள சஹாபாக்களின் கூற்றுக்கள் ஹதீஸ் அல்ல. அஃதர்கள். சஹாபாக்களின் கருத்துக்களேயாகும். அவைகளை மார்க்கமாக்க குர்ஆனும், ஹதீஸும் அனுமதியளிக்கவில்லை. ***சஹாபாக்கள், தாபியீன்கள், தபஉதாபியீன்கள், இமாம்கள் மற்ற எவருமே நபி (ஸல்) அவர்களின் போதனைகளை ஏற்று செயல்பட வேண்டியவர்களேயல்லாமல், நபி(ஸல்) அவர்கள் சொல்லாத ஒன்றில் அவர்களுக்கே மார்க்கம் கற்றுக்கொடுக்க வந்தவர்கள் அல்ல என்பதை மவ்லவிகள் புரிந்து கொள்ளவேண்டும்.***

சபையினர் தங்களின் கூற்றுக்கு ஆதாரமாக இப்னு உமர்(ரழி) அவர்கள் கூறியதாக ஒரு அஃதர் ஆதாரத்தையும் தந்துள்ளார்கள். இப்னு உமர்(ரழி) அவர்கள் அறிவித்துள்ள ஹதீஸையே பொய்யான ஹதீஸ் என ஏற்கனவே சபையின் ஆதாரம் 1ல் நிரூபித்துள்ளோம்.

இப்னு உமர்(ரழி) அவர்களின் தந்தை, நபி(ஸல்) அவர்களால் சுவர்க்க நன்மாராயம் கூறப்பட்ட உமர்(ரழி) அவர்கள் கூறுவதைப் பாருங்கள்.

“குர்ஆனை ஓதக்கூடிய கூட்டத்தினருடன் உமர்(ரழி) இருந்தார்கள். மல, ஜலம் கழித்து விட்டு, குர்ஆனை ஓதியவராக திரும்பி வந்தார்கள். அப்போது ஒருவர், ‘முஃமின்களின் தலைவரே! ஒளுவின்றி குர்ஆனை ஓதுகிறீர்களே!” எனக்கூறினார். உமர்(ரழி) அவர்கள், ‘இது விஷயமாக உனக்கு தீர்ப்பளித்தவன் எவன்? முஸைலமாவா?’ என்று கேட்டார்கள். *ஹதீஸ் நூல் : அல்முஅத்தா*

தன்னை நபி என்று வாதாடியவன் தான், முஸைலமா என்பவன். குர்ஆன் வசனங்களை இன்னின்னார் தொடக்கூடாது, ஓதக்கூடாது என்று சொல்வதற்கு இன்னொரு நபி பிறந்து வரவேண்டும். நபி(ஸல்) அவர்கள் இறுதி நபியானதால், இன்னொரு நபியும் அப்படிக்கூறுவதற்கு வரமுடியாதே என்பதைத்தான், ஒரே ஒரு வாக்கியத்தில், ‘உனக்கு தீர்ப்பளித்தவன் எவன்? முஸைலமாவா? எனக்கேட்டு, அது அர்த்தமற்ற உளறல் என்பதை உணர்த்துகிறார்கள்.

“நபி(ஸல்) அவர்கள் என்னை அணைத்துக்கொண்டு, ‘யா அல்லாஹ்! இவருக்கு குர்ஆனின் விளக்கத்தையும், ஹிக்மத்தையும் கற்றுக் கொடுப்பாயாக’ என்று எனக்காக துஆ செய்தார்கள்’ என்று இப்னு அப்பாஸ்(ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். *ஆதாரம் : புகாரீ, முஸ்லிம், திர்மிதி*

நடைபெற்ற இச்சம்பவத்திலிருந்து, எல்லா சஹாபாக்களும் இப்னு அப்பாஸ்(ரழி) அவர்களை மதித்து கண்ணியப்படுத்தி, குர்ஆனில் தங்களுக்கேற்படும் ஐயங்களுக்கு விளக்கம் பெற்று வந்தனர். குர்ஆனின் விளக்கம் பெற்ற இப்னு அப்பாஸ்(ரழி) அவர்கள், “குளிப்பு கடமையானவர்கள் குர்ஆனை ஆதுவதில் எந்தத் தவறுமில்லை” என்று அறிவிக்கிறார்கள். மேலும், ‘மாதவிடாய் பெண்கள் குர்ஆனை ஒதுவதில் எந்தக்குற்றமும் இல்லை’ என்று இப்ராஹிம் அந்நகயீ(ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள். இருவரின் கருத்துக்களையும், வேறு சில அறிவிப்புக்களுடன் இமாம் புகாரீ(ரஹ்) அவர்கள தமது ஸஹீஹுல் புகாரீயின் முதல் பாகத்தில் ‘ஹைளுடைய’ (மாதவிடாய்) பாடத்தில் 7வது பாகத்தில் அஃதர்களாக பதிவு செய்துள்ளார்கள்.

முஸ்லமிம்களே! சபையினர் சார்ந்துள்ள மத்ஹபு கொள்கைக்கு வலு சேர்ப்பதற்காக எதுவேண்டுமானாலும் செய்வார்கள் என்பதை நோட்டீஸின் மூலம் தெளிவுபடுத்தியுள்ளார்கள். பொய்யான ஹதீஸ்களை மவ்லவிகள் ஏற்கும் செயல், இஸ்லாத்திற்கு தலை குனிவை ஏற்படுத்தும் செயல் என்பதை அறிந்து கொள்ளுங்கள். அதைத்தானே அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். முஸ்லிம்களே மவ்லவிகளின் கூற்றுக்களை ஏற்காதீர்கள்.

சிறு தொடக்குள்ளவர்கள், குளிப்பு கடமையானவர்கள், மாதவிடாய் பெண்கள் மற்றும் பெருந்தொடக்குள்ளவர்கள் எவராயிருந்தாலும் குர்ஆனைத் தொடுவதற்கோ, ஓதுவதற்கோ குர்ஆனிலோ ஹதீஸிலோ எந்தத்தடையும் இல்லை இல்லவே இல்லை. குர்ஆன் முஸ்லிம்களுக்கு மட்டும் சொந்தமானது அல்ல. ‘இக்குர்ஆன் உலக மக்கள் யாவருக்கும் நல்லுபதேசமேயன்றி வேறில்லை’ என்றும் (6:90), ‘ஹுதல்லின்னாஸ்’ மனித வர்க்கத்தினர் அனைவருக்குமே இது வழிகாட்டி என்றும் அல்லாஹ் கூறி இருப்பதால், அனைவருமே தொடலாம் ஓதலாம்.

‘கட்டளையிடப்படாதது உங்களுக்களிக்கப்பட்ட சலுகையாகக் கருதிக் கொள்ளுங்கள்’ என்றும் ‘எந்த நன்மையையும் நான் உங்களுக்கு ஏவாமல் விட்டதில்லை; எந்தத் தீமையை விட்டும் உங்களை நான் த

**டுக்காமல் இருந்ததில்லை'** என்றும் நபி(ஸல்) அவர்கள் கூறியிருப்பதால், தடையில்லாத விஷயங்களில் தடையை ஏற்படுத்தாதீர்கள் என்று சபையினரை கேட்டுக்கொள்கிறோம்.

**"எம்மால் ஏவப்படாத எந்த அமலும் அல்லாஹ்விடம் நிராகரிக்கப்படும்"** என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். *அறிவிப்பவர் : அன்னை ஆயிஷா(ரழி), நூல் : புகாரி, முஸ்லிம்*

பொய்யான ஹதீஸ்களில் அமல் செய்ய மக்களைத் தூண்டும் சபையினர், **'நான் சொல்லாததை (ஹதீஸை) எவன் வேண்டுமென்றே நான் சொன்னதாகக் கூறுகிறானோ, அவன் தன் இருப்பிடத்தை நரக நெருப்பில் ஆக்கிக்கொள்ளட்டும். எனவே, எவனும் என் மீது பொய் கூறவேண்டாம்'** என்று நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளதால் (அலீ(ரழி), அனஸ்(ரழி), அபூஹுரைரா(ரழி), அப்துல்லாஹ் பின் அஜ்ஜுபைர்(ரழி), புகாரீ) இந்த ஹதீஸிற்கு பயந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சபையினரின் பிரசுரத்தைத் தொகுத்தவர், தன்னை ***"மௌலானா மௌலவி"*** என்று குறிப்பிட்டுள்ளார். ***'குரு மகா சன்னிதானம்'*** என மாற்றுமதத் தலைவர்களை அழைக்கும் விதத்தில், 'மௌலானா' என்ற வார்த்தைக்கு சங்கைக்குரிய, கண்ணியமிக்க என்ற அர்த்தங்கள் இருந்தாலும், அல்லாஹ் திருகுர்ஆனில் தன்னை அவ்வாறு அழைக்கச்சொல்லி வழிகாட்டியிருப்பதால், மவ்லவிகள் அல்லாஹ்வுக்கு பயப்பட் டுக்கொள்ளட்டும்.

**"அன்த்த மௌலானா; ஃபன்சுர்னா அலல் கவ்மில் காஃபிரீன்"** *அல்குர்ஆன் 2:286*

**"நீயே எங்கள் இரட்சகன் (பாதுகாவலன்); காஃபிரான கூட்டத்தார்மீது நீ எங்களுக்கு உதவி புரிவாயாக"** என பிரார்த்திக்குமாறும், தன்னை 'மௌலானா' எனக்கூறும்படியும் கற்றுத்தருகிறான். அல்லாஹ்(ஜல்) தனக்கு பயன்படுத்திய வார்த்தையை மவ்லவிகள் தங்களுக்குப் பயன்படுத்திக்கொள்வதற்கு எப்படித்தான் மனம் வருகிறதோ?

மேலும் பிரசுர வெளியீடு : திருச்சி மாநகர ஜமாஅத்துல் உலமா சபை எனக்கூறப்பட்டுள்ளது. உலமா சபை என்றால் அறிஞர்கள் சபை அல்லவா? குர்ஆன், ஹதீஸைப் போதிக்காதவர்கள்தான் அறிஞர்களா? 'உலமா' என உங்களைக் கூறிக்கொள்கிறீர்களே! ஆலிம் என்றால் அறிஞன், உலமா என்றால் அறிஞர்கள். தங்களைத் தாங்களே எவராவது அறிஞர்கள் என்று கூறி பீற்றிக் கொள்வதுண்டா? பந்தா காட்டுவதுண்டா?

**"தங்களைத் தாங்களே பரிசுத்தவான்கள் என்று கூறுபவர்களை (நீங்கள்) பார்க்கவில்லையா?"** (41:49) **'நீங்கள் உங்களைப் பரிசுத்தவான்கள் என்று புகழ்ந்து கொள்ளாதீர்கள். யார் பயபக்தியுள்ளவர் என்பதை அவன் நன்கு அறிவான்** (53:32) என்ற அல்லாஹ்வின் வசனங்களைப் புறக்கணிக்கிறீர்களே!

**"நிச்சயமாக அல்லாஹ்வுடைய அடியார்களில் அல்லாஹ்வுக்கு பயப்படுபவர்கள் தான் உலமாக்கள்"** (35:28) என்று குர்ஆன் கூறுகிறது.

அல்லாஹ்வின் பயமில்லாமல் குர்ஆனை மட்டம் தட்டும் ஃபிக்ஹு சட்டங்களை அரபிக் கல்லூரிகளில் படித்து மவ்லவி பட்டம் பெற்றவர்களை மட்டும் உலமாக்கள் (அறிஞர்கள்) என்று கூறிக்கொள்கிறார்கள் குர்ஆனைப் புறக்கணிக்கும் இந்த மவ்லவிகள். குர்ஆனைப் புறக்கணிப்பது மத்ஹபுகளின், மத்ஹபுகளைப் போதிக்கும்

மவ்லவிகளின் கொள்கையல்லவா?

குர்ஆனைப் புறக்கணிக்கும் கொள்கையை ஏற்றுள்ள மவ்லவிகள், குர்ஆனைத் தொடக்கூடாது, ஓதக்கூடாது என நீலிக்கண்ணீர் வடிப்பது சாத்தான் வேதம் ஓதுவது போலிருக்கிறது.

**“எவன் என்னுடைய குர்ஆனை (திக்ர்) அதன் உபதேசத்தைப் புறக்கணிக்கிறானோ, நிச்சயமாக அவனுக்கு நெருக்கடியான வாழ்க்கையே இருக்கும். மேலும் நாம் அவனை கியாம நாளில் குருடனாகவே எழுப்புவோம்!”** என்று இறைவன் கூறினான். (அப்போது) **“என் இறைவனே! நான் பார்வையுடையவனாக இருந்தேனே! என்னை ஏன் குருடனாக எழுப்பினாய்?’** என்று கேட்பான். (அதற்கு இறைவன்), **‘இவ்விதம்தான் இருக்கும். நம்முடைய வசனங்கள் உம்மிடம் வந்தன. அவற்றை நீ மறந்து விட்டாய்; அவ்வாறே இன்றையதினம் நீயும் மறக்கப்பட்டு விட்டாய்”** என்று கூறுவான். *அல்குர்ஆன் 20:124,125,126*

மவ்லவிகளைப்பற்றிக் கூறிவிட்டால், அவர்களுக்கு உச்சகட்ட கோபம் வந்து விடும். ஆகவே குழப்பவாதிகள் எனக்கூறி, நிறைய பொய்களை அவிழ்த்து விட்டு, சஹாபாக்கள், இமாம்கள் மீது பத்தியுள்ளவர்களாகக் காட்டிக்கொண்டு மக்களை ஏமாற்ற அடுத்த பிரசுரம் வெளியிடலாம். இன்ஷா அல்லாஹ் வெளியிட்டால் அப்போதும் சத்தியத்தைக் (குர்ஆன், ஹதீஸைக்) கொண்டே சந்திப்போம்.